DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 94/2022

Miscellaneous :

Sessions : DW 3

Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | ரத்தின் அருண்குமார் |
| Father / Husband Name | ரசீதசபாபதி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 10.06.2026

**எதிரி தரப்பில் முதல் விசாரணை:**

1. நான் தற்போது SBI வங்கி மதுராந்தகம் கிளையில் துணை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க எங்கள் வங்கி கிளையின் மேலாளருக்கு அழைப்பாணை வந்தது, எங்கள் கிளை மேலாளர் வேறொரு வழக்கிற்கு சாட்சியம் அளிக்க செங்கல்பட்டு நீதிமன்றத்திற்கு சென்றுள்ளதால் இந்த வழக்கில் என்னை சாட்சியம் அளிக்க அனுப்பிவைத்தார். என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலை எங்கள் வங்கியின் காசோலை என்றால் சரிதான். இந்த வழக்கின் காசோலையான 033787 என்ற காசோலை எந்த தேதியில் செலுத்தப்பட்டு என்ன காரணத்திற்காக திருப்பப்பட்டது என்றால் அந்த காசோலையில் 08.06.2022 என்று தேதி குறிப்பிடப்பட்டுள்ளது. எங்களுடைய வாடிக்கையாளர் மனோமேஷாக் என்பவரின் வங்கி கணக்கை பார்வையிட்டதில் 2022ம் ஆண்டு ஜுன் மாதம் முழுவதும் அந்த காசோலை செலுத்தப்படவில்லை.

2. நான் 2022ம் ஆண்டு ஜுன் மாதத்திற்குரிய மனோமேஷாக் என்பவரின் வங்கி கணக்கு பட்டியலை கொண்டுவந்துள்ளேன். **(அந்த வங்கி கணக்கு பட்டியல் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இந்த வழக்கு காசோலையின் அடுத்த காசோலையான காசோலை எண். 033788, 30.01.2018 ம் தேதி வரவுக்காக செலுத்தப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு காசோலை எந்த வங்கியில் செலுத்தப்பட்டாலும் அது அவரது வங்கி கணக்கு Statement-ல் தெரியும் என்றால் சரிதான். பொதுவாக SBI வங்கியின் காசோலை திருப்பப்பட்டாலும் திருப்புதல் மெமோ கணினி மூலம் பதிவிறக்கம் செய்து தான் கொடுப்போம், இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ம.சா.2-ல் Letter Pad-ல் தட்டச்சு செய்து தரமாட்டோம் என்றால் பொதுவாக இவ்வாறு தரமாட்டோம். ஆனால் வாடிக்கையாளர் கேட்டுக்கொண்டால் இதுபோல் தருவோம்.

**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

3. இந்த வழக்கு காசோலை SBI வங்கி கருங்குழி கிளையால் பெறப்பப்பட்டதாக ம.சா.1ல் குறியீடுகள் உள்ளது என்றால் சரிதான். ம.சா.2, வாடிக்கையாளர் கேட்டுக்கொண்டதற்காக வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.2 ன் காசோலை 09.06.2022 அன்று காலை 10 மணி 10 நிமிடத்தில் வசூலுக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.